


ஜமா இஸ்லாமியாவுக்குப் பணம் எப்படி வருகிறது?

இது மிக முக்கியமான கேள்வி. மத்தியக் கிழக்கு தேசங்களில் இயங்கும் இயக்கங்களுக்குப் பணம் கிடைப்பதுடன், ஜமா போன்ற தென் கிழக்கு நாடுகளில் இயங்கும் இயக்கங்களுக்குப் பணம் வரும் பாதையை ஒப்பிட இயலாது. இங்கே உள்ள அரசியல் மற்றும் வெளிவட்டாரத் தொடர்புச் சூழல் இதற்கு மிக முக்கியக் காரணம்.

உதாரணமாக, எந்த ஒரு பாலஸ்தீன் போராளி இயக்கத்தையோ, ஹிஸ்புல்லா போன்ற இயக்கங்களையோ எடுத்துக் கொள்ளலாம். அவர்களுக்கு அண்டை தேசத்து அரசுகளே மிக வெளிப்படையாக உதவிகள் செய்யும். குறிப்பாக, இரான் போன்ற சில தேசங்கள் போராளி இயக்கங்களுக்குத் தம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேயே அறிவிக்காத ஒதுக்கீடு செய்துவிடுகின்றன. தவிரவும், இயக்கங்களின் ஆயுதக் கடத்தல், ஆயுத வர்த்தகம் போன்றவை தடையில்லாமல் நடைபெறத் தம்மாலான அத்தனை உதவிகளையும் செய்யும்.

ஆனால், கிழக்காசியாவில் அத்தகைய நிலைமை இல்லை. இயக்கங்கள் பெரும்பாலும் சுய சார்பில்தான் நின்றாகவேண்டும், வளர்ந்தாக வேண்டும். தோழமை இயக்கங்கள் சமயத்தில் உதவும். ஆனால், எப்போதும் எதிர்பார்க்க முடியாது. அவரவர் கஷ்டங்கள் அவரவருக்கு. எனவே, ஜமா இஸ்லாமியா தனக்குத் தடையின்றிப் பணம் வருவதற்கென்று பிரத்தியேகமாகச் சில வருவாய் வழிகளை உருவாக்கிக் கொண்டது. அவற்றுள் எட்டு வழிகள் மிகவும் முக்கியமானவை. இன்றுவரை பலன் தருபவை.

முதலாவது கூரியர் சர்வீஸ். இது கடிதப் பரிமாற்ற சர்வீஸ் அல்ல. காசு பரிமாற்ற சர்வீஸ்.

வெளிநாடுகளில் பணியாற்றும் இந்தோனேஷியர்கள் (குறிப்பாக, அமெரிக்கா மற்றும் சில பணக்கார ஐரோப்பிய தேசங்களில்) வங்கி மூலம் அல்லாமல் தனிப்பட்ட முறையில், கணக்குக் காட்ட விரும்பாத பணத்தைத் தம் குடும்பத்தாருக்கு அனுப்பவென்றே ஜமா இஸ்லாமியாவில் ஒரு தனி கூரியர் சர்வீஸ் செயல்படுகிறது. பல்வேறு நாடுகளில் உள்ள தம் ஆள்கள் மூலம் ஜமா இஸ்லாமியா, அந்தந்தப் பிராந்தியத்தில் பணியாற்றும் வளமான இந்தோனேஷியர்களைக் குறிவைத்து இதனை ஆஃபர் செய்வார்கள். 'உங்களுக்கு என்ன வேண்டும்? ஒரு லட்ச ரூபாய் கணக்கில் வராத பணத்தை, உங்கள் வீட்டுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். அவ்வளவுதானே? அதில் ஐந்து சதவிகித்தை எங்களுக்கு சர்வீஸ் சார்ஜாகக் கொடுத்துவிடுங்கள். பணம் போய்ச் சேரவேண்டியது எங்கள் பொறுப்பு.'

மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள். வருடத்துக்குக் குறைந்தது இருபது லட்சம் டாலர்களாவது இந்த வகையில் ஜமா இஸ்லாமியாவுக்கு 'சர்வீஸ் சார்ஜாக'க் கிடைக்கிறது.

இரண்டாவது வழி, அல் காயிதாவின் நிதி உதவி. இது ஒரு நிரந்தர உதவி என்றபோதும், எப்போது கிடைக்கும் என்று சொல்ல முடியாது. பல வருடங்கள் கிடைக்காமலும் இருக்கலாம். திடீரென்று அள்ளிக் கொடுக்கவும் செய்வார்கள். கையிருப்பைப் பொறுத்த விஷயம் இது. சிங்கப்பூர் மற்றும் மலேசிய உளவுத்துறையின் கணக்குப் படி 1996 – 2001 காலகட்டத்தில், ஜமா இஸ்லாமியாவுக்கு அல் காயிதா அளித்த உதவித்தொகை மொத்தம் 1,30,000 டாலர்கள். ஆனால், 2000-ம் ஆண்டு மட்டும் ஜமா இஸ்லாமியாவுக்கு ஆப்கனிஸ்தான் காடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பணம் இரண்டு லட்சம் டாலர்கள் என்று இன்னொரு தகவல் இருக்கிறது. ஓமர் அல் ஃபாருக் என்கிற ஜமா இஸ்லாமியாவின் சீனியர் உறுப்பினர் ஒருவர் மூலம் இந்தப் பணம் அனுப்பப்பட்டிருப்பதாக ஒரு குறிப்பு தெரிவிக்கிறது. ஆனால், இதற்கு நம்பத் தகுந்த ஆதாரம் ஏதுமில்லை.

ஆகஸ்ட் 2002-ல் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஜமா இஸ்லாமியாவின் உறுப்பினரான வான்மின் வான் மாட் (Wan Min Wan Mat) என்பவர், பாலி குண்டு வெடிப்புகளுக்காக மட்டுமே அல் காயிதாவிடமிருந்து சுமார் எழுபத்து நான்காயிரம் டாலர் பணம் கிடைத்ததாகத் தம் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார். இது கொஞ்சம் நம்பும்படியான தகவல். ஏனெனில், சம்பந்தப்பட்ட பிரகஸ்பதி, ஜமா இஸ்லாமியாவின் பொருளாளர்களுள் ஒருவர்.

ஆனால், அங்கே அமெரிக்கச் சிறையில் அடைபட்டிருக்கும் ஜமாவின் முதன்மைத் தளபதி ஹம்பாலி அளித்த ஒரு வாக்குமூலம் சற்று வேறு மாதிரி இருப்பதையும் கவனிக்கவேண்டும்.

“ஜூன் 2003-ல் காலீத் ஷேக் முஹம்மது மூலம் ஜமா இஸ்லாமியாவுக்கு 1,30,000 டாலர் பணம் வந்து சேர்ந்தது. எவ்வித நிபந்தனையும் இல்லை. இப்படித்தான் செய்ய வேண்டும், இது கூடாது என்கிற அறிவிப்புகள் ஏதுமில்லை. வெறும் பணம். அவ்வளவுதான்!”

ஆனால், அல் காயிதா அனுப்பும் பணம் முழுவதும் அதிரடி நடவடிக்கைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றொரு எழுதப்படாத ஒப்பந்தம் இரு இயக்கங்களுக்கும் இடையே இருப்பதாகத் தெரிகிறது. ஜமா இஸ்லாமியாவின் தினசரி செலவுகளுக்கோ, யானைக்கு அல்வா வாங்கிப் போடவோ, குதிரைக்கு குல்லா வாங்கவோ கூடாது.

மூன்றாவது வழி, வசூல். இது எங்குமிருப்பது. இறைவனைப் போல. உலகமெங்கும் ஜமா இஸ்லாமியாவுக்கு நிதி வசூல் செய்யவென்றே தனியொரு பிரிவு இருக்கிறது. வழக்கமான ‘கஷ்டப்படும் முஸ்லிம்களுக்கு உதவி செய்ய’ என்கிற பாட்டு. சேரும் நிதியைப் பாதுகாப்பாக, யாராவது ஒரு தனி நபர் மூலம் மூட்டை கட்டிக் கொடுத்தனுப்பி விடுவார்கள். அந்த நபர், இயக்கத்தைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார் என்று சொல்வதற்கில்லை. யாரோ ஒரு வழியில் போகும் வீரப்பனாகவும் இருப்பார். ‘இந்தாப்பா, இந்த கடலைக்கா மூட்டைய நம்மூர்ல கொண்டுபோய் கோயிந்தசாமியாண்ட குடுத்துடுவியாம்’ என்று தலையில் கட்டி அனுப்பி, வழிச்செலவுக்கு அஞ்சு பத்து கொடுத்து விட்டால் தீர்ந்தது விஷயம்.

ஒரு விஷயம். எடுத்துப் போகிறவருக்கும் ஓரளவு விஷயம் தெரிந்திருக்கும். கொடுத்தனுப்புகிறவர்களும் அத்தனை ஒன்றும் அலட்சியமாக இருந்துவிட மாட்டார்கள். இயக்க அனுதாபிகளாகப் பார்த்துத்தான் தேர்ந்தெடுப்பார்கள். ஏனெனில், வருடத்துக்குக் குறைந்தது பத்து முதல் இருபது லட்சம் டாலர்கள் இந்த வகையில் ஜமா இஸ்லாமியாவுக்குப் போய்ச் சேருகிறது.
நான்காவது வழி, அறக்கட்டளைகள். ஜமா இஸ்லாமியாவே வேறுவேறு பெயர்களில், வேறு வேறு அறப்பணிகளுக்காக உலகமெங்கும் நடத்தும் அறக்கட்டளைகள். இந்த அறக்கட்டளைகள் மூலம் திரட்டப்படும் பணத்துக்குப் பெரும்பாலும் வருமான வரி இருக்காது. அதே சமயம், பல நாட்டு கரன்சி ஒரே சமயத்தில் வந்து சேரும். இந்தப் பணத்தில்தான் ஜமாவின் வெளிநாட்டு செல்கள் பல பராமரிக்கப்படுகின்றன. கிழக்காசியாவில் இயங்கும் அறக்கட்டளைகளில் பதினைந்து முதல் இருபது சதவிகித நிறுவனங்கள் ஜமா இஸ்லாமியாவின் இத்தகைய ரகசிய நிதி சேர்ப்பு

அறக்கட்டளைகள்தான் என்று சொல்லியிருக்கிறது இந்தோனேஷிய உளவுத்துறை. இந்தப் பதினைந்து முதல் இருபது சதவிகித அறக்கட்டளைகளுள் சுமார் அறுபது சதவிகிதம், பிலிப்பைன்ஸில் மட்டுமே செயல்படுகின்றன.

ஐந்தாவது வழிக்கு ஜமா இஸ்லாமியா ஜகாத் என்று பெயரிட்டிருக்கிறது. இது ஒரு கண்டிப்பான வசூல். இந்தோனேஷிய முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தம் ஆண்டு வருமானத்தில் 2.5 சதவிகிதத்தை இயக்கத்துக்குத் தந்துவிட வேண்டுமென்பது செயல் திட்டம். பலபேர் விரும்பியே தருகிறார்கள். சிலரிடமிருந்து வலுக்கட்டாயமாகவும் பெறப்படுகிறது இப்போது.

ஜகாத் என்பது ஏழைகளுக்கு உதவுவதற்கென்று இஸ்லாம் வகுத்தளித்திருக்கும் ஒரு வழி. இதனைக் கருத்தில் கொண்டு இந்தோனேஷிய அரசு,இந்த ஜகாத் உதவிகளுக்கு பூரண வருமானவரி விலக்கும் அளித்திருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு ஜமா இஸ்லாமியாதான் பெரும் ஜகாத் தொகைக்கு ஏதாவது ஒரு அறக்கட்டளை யின் பெயரில் வருமான வரி விலக்குக்கான சான்றிதழும் வழங்கி விடுகிறது.

எல்லா அறக்கட்டளைகளுமே இம்மாதிரியான காரியத்துக்காகத்தான் பயன்படுகின்றன என்று சொல்லிவிடக் கூடாது. பல அறக்கட்டளைகளுக்குப் போகும் நிதி, மசூதிகள் கட்டவும், இஸ்லாமிய நூல்களை மொழி பெயர்க்கவும் பதிப்பிக்கவும், மாநாடுகள் நடத்தவும் மற்ற பல மக்கள் பணிகளுக்காகவும் போகத்தான் செய்கின்றன. ஆனால், இத்தகைய நிதியில் கணிசமான அளவு ஜமா இஸ்லாமியாவுக்கும் போகிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

ஆறாவது வழி, ஷெல் கம்பெனி முதலீடுகள். அதாவது, எண்ணெய் நிறுவனங்களில் செய்யப்படுகிற முதலீடுகள். ஜமா இஸ்லாமியா, தன் வருமானத்தில் ஒரு பகுதியை கிழக்காசிய நாடுகளில் இயங்கும் பல வெற்றிகரமான எண்ணெய் நிறுவனங்களில் முதலீடு செய்திருக்கிறது – பினாமி பெயர்களில். நல்ல லாபகரமான வழி இது. ஆனால், இதன்மூலம் இயக்கம் எத்தனை சம்பாதிக்கிறது என்பது பற்றிய துல்லியமான விவரங்கள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

வழி ஏழு ஹவாலா. அதிகாரபூர்வமில்லாத பணப்பரிமாற்ற நடவடிக்கைகள் மூலம் கிடைக்கிற கமிஷன். இது வருடத்துக்குக் குறைந்தது ஐந்து லட்சம் டாலர்கள் அளவுக்காவது சம்பாதித்துக் கொடுப்பதாகத் தெரிகிறது.

எட்டாவது வழிதான் கடத்தல். மிக முக்கியம் இது. தங்கம் மற்றும் விலை உயர்ந்த கற்கள் (வைரம், ப்ளூ டயமண்ட் என்கிற நீலக்கல், ரூபி என்கிற சிவப்புக் கல், குவார்ட்ஸ் என்கிற அதி ஜொலிப்புக் கல் இன்னபிற.) கடத்துவது இந்தோனேஷியாவிலும் ஏனைய கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் காலம் காலமாக இருந்துவரும் ஒரு புராதனத் தொழில்.

தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்தான் உலகிலேயே கற்கள் வியாபாரத்துக்குத் தலைநகரம் என்று சொல்லப்படுகிற நகரம். பர்மா மற்றும் கம்போடியாவிலிருந்து கொண்டு வரப்படும் இத்தகைய கற்களை, பாங்காக்கில் வைத்துத்தான் விலை நிர்ணயிப்பார்கள்; விற்பனையும் செய்வார்கள். கிட்டத்தட்ட உலகம் முழுவதும் பயணம் மேற்கொள்ளும் உயர் ரக கற்கள் இவை. இந்தத் தொழிலில் புழங்கும் பணத்தைக் கணக்கே பண்ணமுடியாது. அரசுக்குத் தெரிந்து புழங்கும் பணமே பல டிரில்லியன் டாலர்கள். எனில், தெரியாமல் புழங்கும் பணத்தைப் பற்றி யோசித்துப் பாருங்கள்.

யாரும் அத்தனை சுலபத்தில் நெருங்கக்கூட முடியாத ராட்சஸ பிசினஸ் இது. முதல் முதலில் ஓர் இயக்கம் இந்தத் துறையில் புகுந்தது என்றால், அது அல் காயிதாதான். அல் காயிதாவின் பிரதானமான வருமான வழிகளுள் ஒன்றாக 2000-ம் ஆண்டு வரை இது இருந்து வந்தது என்று சிங்கப்பூர் உள்ளிட்ட பல கிழக்காசிய நாடுகளின் உளவு அமைப்புகள் தெரிவித்து வந்திருக்கின்றன. ஆனால், அல் காயிதா ஒரு போதும் கடத்தல்களில் ஈடுபட்டதில்லை என்று

மறுப்போரும் உண்டு. உறுதி செய்யப்படாத தகவல் அது.

ஆனால், செப்டெம்பர் 11, 2001 சம்பவத்துக்குப் பிறகு, அல் காயிதாவின் அனைத்து பிஸினஸ்களுமே காணாமல் போய்விட, தென் கிழக்காசிய நாடுகளின் ஏகபோக கல் கடத்தல் சக்கரவர்த்தியாக ஜமா இஸ்லாமியா ஆகிப்போனது.

கம்போடியாவிலிருந்து பாங்காக்குக்குக் கற்களைக் கடத்துவது, பாங்காக்கிலிருந்து பல ஐரோப்பிய, தென்னமெரிக்க நாடுகளுக்கு அதைக் கடத்துவது, பாங்காக்கிலேயே கள்ளச் சந்தையில் விற்பது என்று, அந்தத் தொழிலின் சகல சாத்தியங்களிலும் பணம் பார்ப்பதற்கென்றே ஜமாவில் தனியொரு பிரிவு உண்டு என்று சொல்கிறார்கள். ஆனால் கவனிக்கவும் – இது ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல். கடத்தல் பிஸினஸில் ஜமா கணிசமான அளவு ஈடுபட்டு, வருமானம் ஈட்டுகிறது என்பது மட்டும் இந்தோனேஷிய, சிங்கப்பூர், தாய்லாந்து அரசுகளால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இடையே கொஞ்ச காலம் இலங்கைப் போராளி அமைப்புகளுடன் தொடர்பு ஏற்பட்டு, அவர்களுக்காக போதைக் கடத்தலிலும் ஜமா பங்கு பெற்றதாக ஒரு செய்தி உண்டு.

உளவுத் துறை தகவல்களுக்கெல்லாம் பொதுவாக இயக்கங்கள் பதில் சொல்லிக் கொண்டிருப்பதில்லை. மறுப்பதிலோ, எதிர்ப்பதிலோ அவர்கள் ஆர்வம் செலுத்துவதில்லை. இயக்கம் செழிக்கப் பணம் வேண்டும். யார் கொடுப்பார்கள்? முடிந்த விதங்களிலெல்லாம் சம்பாதிப்பது பிறப்புரிமை. தீர்ந்தது விஷயம்.

ஆனால் ஒன்று. மத்தியக் கிழக்கு நீங்கலாக, உலகில் மற்ற அனைத்துப் பகுதிகளிலும் இயங்கும் தீவிரவாத இயக்கங்களுள் ஜமா இஸ்லாமியா அளவுக்கு வளமை பொருந்திய இயக்கம் வேறு கிடையாது. இதனால்தான், ஜமா இஸ்லாமியாவின் பல முக்கியத் தலைவர்கள் ஹம்பாலி உள்பட கைது செய்யப்பட்டு, வருடக்கணக்கில் சிறையில் அடைபட்டுக் கிடக்க நேரிட்டாலும், இயக்கத்தில் எவ்வித சலசலப்பும் எழாமல் அதே வேகத்துடனும் வீரியத்துடனும் செயல்பட்டுக் கொண்டிருக்க முடிகிறது.